**பாணந்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 25 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சுகாதார சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் அனுமதிப்பத்திர கட்டணம் வருமானம் ரூபா 86,050 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வதற்குரிய பொது நிர்வாகம் மற்றும் பௌதீக நிகழ்ச்சி திட்டத்திற்குரிய உபகரணங்களின் செலவு ரூபா 177,926 தொகை குறைத்தும் பொது களஞ்சியம் ரூபா 177,926 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நெணசல நிலையத்திற்காக பேணிச் செல்லப்படுகின்ற சேமிப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,286,130 மீதி மற்றும் 2018 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட ரூபா 172,496 தொகையான வருமானம் என்பன நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய வருமானமான ரூபா 1,123,638 தொகை திரண்ட நிதியக்கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | உறுப்பினர் படி மற்றும் பெறவேண்டிய உறுப்பினர் படி ரூபா 285,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். |
| (v) | முத்திரைக் கட்டண வருமானத்திலிருந்து குறைக்கும் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ள டெக்டர் மற்றும் இரண்டு டேலர்களின் பெறுமதியான ரூபா 3,285,000 தொகை பயன்பாட்டு சேவைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மாகாண சபை கடன் கணக்கில் செலவில் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் திரண்ட நிதியம் ரூபா 3,285,000 வரவு வைக்கப்பட்டு கடன் கணக்கு செலவு வைக்கபட்டமையின் காரணமாக திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 3,285,000 தொகை குறைத்து காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் குறித்த ஆலோசனை கணக்கு வைப்பதற்காக வழங்கப்படவில்லை. |
| (vi) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,955,000 தொகை செலவில் பெறப்பட்ட மென்பொருள் முறைமை மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | இருப்பின் பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 8,326,666 தொகையான புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு மீதி 1,005,933 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பிழை திருத்தப்பட்டுள்ளது. |
| (viii) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்து மீதி ரூபா 60,184 தொகை அதிகரித்து காண்பிக்கபட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்படும். |
| (ix) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பு மீதி ரூபா 750,811 தொகை அதிகரித்தும் நிலையான வைப்பு வட்டி ரூபா 96,084 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்து பதிவேடு, முற்பணப் பதிவேடு, ஊழியர் கடன்பட்டோலை மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன காணப்படாமையினால் ரூபா 20,667,441 கூட்டுத்தெகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதி படி முறையாக சொத்துக்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இறுதி நடவடிக்கைகள ான ஆதனங்களை தடைசெய்வதற் கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிவப்பு அனுமதி பத்திரம் விநியோகிப்பதன் மூலம் நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் ஆதனங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1,078,611 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணத் தொகை உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | மதிப்பீட்டு முற்பணம் உரிய பணிநிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். . | முற்பண மீதியில் ரூபா 1,061,250 தொகையான மீதியை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவித்தல் | - | சுற்றாடல் பபாதுகாப்பு அனுமதி பத்திரங்களில் காலாவதியாகி இருந்த 03 நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதி பத்திரம் விநியோகிப்பதற்கும், 09 நிறுவனங்களுக்காக புதிதாக அனுமதி பத்திரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதி பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக விஷேட ஏற்பபாடுகள் சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 434 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஆதன வரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளபடவேண்டியிருந்த போதிலும் இறுதியாக 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது . | சட்டம் மற்றும் அரச நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும் . | 2018 ஆம் ஆண்டு முதல் ஆதனவரி மதிப்பீடொன் று மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,657,789 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,067,145 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 45,200,000 | 47,666,748 | 35,586,716 | 18,851,019 | 45,550,000 | 45,438,537 | 33,658,610 | 19,813,677 |
| (ii) | வாடகை | 5,305,000 | 5,289,224 | 1,568,451 | 3,720,773 | 1,506,000 | 1,551,513 | 1,533,612 | 435,840 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 350,000 | 506,478 | 506,478 | - | - | 415,810 | 415,810 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 55,000,000 | 55,000,000 | - | 147,218,030 | 55,000,000 | 55,000,000 | - | 96,105,750 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதன வரி நிலுவை வருமானம் ரூபா 19,659,311 ஆக | சகல நிலுவை வருமானமும் அறவிடப்பட | நிலுவை வருமானத்தில் 14.29 சதவீதம் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் 2019 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா 5,746,932 தொகை அதாவது 29 சதவீதம் அறவிடப்படவில்லை. | வேண்டும். | அறவிடப்பட்டுள்ளது. |
| (ii) | வருடாந்த சிட்டையிடலில் ரூபா 44,784,787 ஆக இருந்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 5,564,433 தொகை அதாவது 12 சதவீதம் அறவிடப்படவில்லை. | சகல நிலுவை வருமானமும் அறவிடப்பட வேண்டும். | அது ஆதன வரி சிட்டையிடலில் 12 சதவீதம் அறவிடப்படவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 18,719,584 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை 2019 யூன் 30 ஆந் திகதி வரையில் 11,321,546 ஆக இருந்தது. | சகல நிலுவை வருமானமும் அறவிடப்பட வேண்டும். | 2019 யூன் 30 ஆந் திகதி வரையில் 7,398,038 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (iv) | நிலுவை ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களை விஞ்சிய ஆதன வரி நிலுவை வருமானம் 2019 யூன் 30 ஆம் திகதி வரையில் ரூபா 4,199,438 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி மொத்த ஆதனவரி நிலுவை 37 சதவீதம் ஆகும். | சகல நிலுவை வருமானமும் அறவிடப்பட வேண்டும். | ஆதனவரி அறவிடல் சதவீதம் 28.03 ஆகும். |

**2.2.3 வியாபார மற்றும் கைத்தொழில் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வியாபாரம் மற்றும் கைத்தொழில் வரி பரிமாணம் ரூபா 82,590 ஆக இருந்ததுடன் அது ஆண்டின் போது அதில் ரூபா 65,840 தொகை அதாவது 80% அறவிடப்படவில்லை | சகல நிலுவை வருமானமும் அறவிடப்பட வேண்டும். | சகல நிலுவை வருமானத்தையும் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 கடை வாடகை வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான 302 கடைகளில் இருந்து | நிலுவை வாடகை அறவிடப்படவேண்டு | நிலுவை வாடகையை பதிவழிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை கடை வாடகை ரூபா 435,840 ஆக இருந்ததுடன் ஆண்டில் இறுதிவரையில் அதில் ரூபா 386,577 தொகை அதாவது 88 சதவீதம் அறவிடப்படவில்லை. | ம். | நியாயப்படுத்தல் அறிக்கை தயார் செய்யப்படுகின்றது. |
| (ii) | புகையிரத வீதியின் 22 கடைகளுக்காகவும் சந்தை வீதி 22 கடைகளுக்காகவும் மீளாய்வாண்டின் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4,968,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 3,720,773 தொகை அதாவது 75 சதவீதம் அறவிடப்படிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை கடை வாடகை ரூபா 4,107,289 ஆக இருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தருடன் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | புகையிரத நிலைய வீதி மற்றும் சந்தை வீதி கடைகள் 15 வருடங்கள் அளவிலான காலத்தின் பின்னர் 2017 யூலை மாதத்தில் புதிய கடை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 4,968,000 தொகையில் வருமான சிட்டையில் செய்யப்பட்டிருந்தும் 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 5.1.2 இன் கீழ் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தருடன் விசாரித்து புதிய மதிப்பீட்டை ஏற்று அதனை அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும். |

### 2.2.5 முச்சக்கர வண்டிக் கட்டணம் அறவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் முச்சக்கரவண்டி நிறுத்திவைக்கும் 67 இடங்கள் வர்த்தமானியில் பிரகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2018 ஆம் ஆண்டின் போது 43 இடங்கள் | முச்சக்கரவண்டி நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்களில் மெய்மெய்யாய்வு | முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் இடங்களில் கட்டணத்தை அறவிடும் போது முச்சக்கரவண்டி |

| | | |
|---|---|---|
| மட்டுமே மெய்மெய்யாய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மெய்மெய்யாய்விற்கு உட்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளில் இருந்து எந்த ஒரு கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை | செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்படவேண்டும். | உரிமையாளர்கள் தொடர்பாக பிரச்சனை காணப்பட்டதுடன் உப விதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 யூன் 30 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 66,122,270 ஆகும். | நிலுவை முத்திரை கட்டண வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரை கட்டணப் பட்டோலை மாகாண இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) உப விதிகள்** | | |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ஒரு விடயத்திற்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது. | நகர சபை கட்டளை சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 திசம்பர் 28 ஆம் திகதி வர்த்தகமானியின் மூலம் பிரதான 15 விடயங்கள் தொடர்பாக உப விரிகள் விதிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்** | | |
| (i) சபையினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டால் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனக் கிரயம் ரூபா 259.1 மில்லியனுக்காக கட்டு நிதித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வதற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 15 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் எதுவும் நிறைவேற்றப்படாமல் ரூபா 5.4 மில்லியன் கிரயமான 17 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக அமுல்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| (i) | கழிவு பொருள் முகாமைத்துவத்திற்காக பங்களிக்கின்ற பதவியணியினர்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,522,037 தொகையான செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த கழிவு பொருள் முகாமைத்துவ செலவினம் ரூபா 40,136,037 ஆகும். அந்த செலவினம் சபையின் ஒட்டுமொத்த ஆதன வரி சிட்டையிடலில் 95 சதவீதம் ஆகும். | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்டகால திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செலவினங்களை குறைக்கும் வகையில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும் | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு இடமொன்று சபை அதிகாரி பிரதேசத்தில் காணப்படாமையினால் முறையாக கழிவுப்பொருட்கள் அகற்றும் முறைமையொன்று காணப்படாமையின் அடிப்படையில் தனியார் நிறுவனத்திற்கு கழிவு அகற்றுவதற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2010 ஆம் ஆண்டின் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினதும் சபை நிதியத்தினதும் ரூபா 774,593 செலவில் உயிரியல் வாயு பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | நிர்மாணிக்கப்பட்டுள்ள உயிரியல் வாயு பிரிவை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற உயிரியல் வாயுப் பிரிவை செயற்படு நிலையில் கொண்டு வருவதற்கு ரூபா 10 இலட்சம் செலவு ஏற்படுவதுடன் அதில் எதிர்பார்த்த பிரதி பலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | | |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு உள்ளடக்கபடாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட குறிகாட்டிகளுக்காக சகல தரப்பினர்களையும் பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் தரவுகளை சேகரிக்கும் முறைமையொன்றும் அதற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும் முறைமையொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | வறுமையை நீக்குவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ii) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை இனங்காணல் சபையினால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பௌதீக வள முகாமைதுவத்திற்கான திட்டமும் காணப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| (i) | சபையின் அங்கிகரிக்கப்பட்ட பதவி பணியினர்களில் கணக்காளர் பதவி, ஒரு பொது சுககாதார பரிசோதகர் பதவி, ஒரு நூலகர் பதவி ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவி, ஒரு முகாமைத்துவ உதவியாளர் பதவி, 02 வருமான பரீட்சகர் பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 20 பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ii) சுகாதார தொழிலாளர்கள் போதியளவான எண்ணிக்கையில் சபையில் சேவையில் இருக்கும் போது ஹட்சன் பூங்கா சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது மாதமொன்றிற்கு ரூபா 25,200 வீதம் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து சேவை பெறப்பட்டிருந்தது. | சேவை தேவையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தப்படவேண்டும் | தற்போது காணப்படுகின்ற பதவியணியினர் போதியளவு இன்மையினால் மிகவும் பயனுள்ள சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| (i) மரணமடைந்த ஊழியரிடமிருந்து ரூபா 102,700 தொகை, சேவையை விட்டுச் சென்ற 02 ஊழியர்களிடம் இருந்து 282,600 தொகையான கடன் மற்றும் மீதி 05 ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 766,005 ஆக ரூபா 1,151,305 கடன் மீதி 2019 யூலை 01 ஆம் திகதி அளவில் அறவிடவேண்டியிருந்தது. | விரைவாக நிலுவை கடைமீதி அறவிடப்படவேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 2009 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதி ரூபா 521,639 ஆகும். | கடன் மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அங்கீகாரத்தை பெற்று கணக்குகளிடம் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளின் போது 25,830 சதுர அடி பரப்புக்களையுடைய பொது சந்தை தொகுதிக் கட்டிடம் 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி தேசிய கட்டிட நிறுவனத்தின் வழங்கப்பட்ட அறிக்கை பிரகாரம் இக்கட்டிடத்தின் கொங்கிறீட் இடம் | 2017 யூலை 04 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுக் கூட்ட கட்டளை | கணக்குகள் செயற்குழுக் கூட்ட கட்டளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| துருப்பிடித்திருந்தமை மற்றும் பழுது பார்த்தல் பயனற்றதாக இருந்தமை என்ற காரணங்களின் அடிப்படையில் உடைத்து அகற்றப்பட வேண்டும் என வெளிப்படுத்தப்பட்டதுடன் 2019 யூன் 15 வரையிலும் நடாத்திச் செல்லப்பட்டது. 2017 யூலை 04 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற கணக்குகள் செயற்குழு கூட்டத்தின் போதும் இந்த விடயங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக அனுப்புமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதும் அக்கட்டளை 2019 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | அமுல்படுத்தப்பட வேண்டும். | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 9 டெக்டர் டேலர்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை | ஓட்ட நிலையில் காணப்படுகின்ற வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் பெறப்பட வேண்டும். | காப்புறுதி சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.5 பெறுகை

#### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக ரூபா 5,425,422 தொகையான செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 17 வேலைகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று காணப்படவில்லை. | செயல் முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று காணப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பான செயற்திட்டம் சபையினால் தாபிக்கப்பட்ட பின் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் முன்னுரிமை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது. |

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளுராட்சி அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 984,587 தொகையான செலவினத்தை செய்து 2017 திசெம்பர் 31 ஆம் திகதி கரையோரப்பூங்காவில் கொங்கிறீட் மேசையுடன் சதுரவடிவிலான 4 கதிரைகள் வீதம் ஸ்தாபிக்கப்படுள்ளதுடன் இவ்வாறு அமைக்கப்பட்ட 14 மேசைகளில் 6 மேசைகள் உடைந்திருந்தமை 2018 செப்டம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது | உடன்படிக்கை செய்யப்பட்ட குறித்த நியமங்களை உடைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | கரையோரப்பூங்காவில் அமைக்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்ற வெளித்தரப்பினர்களின் கவனம் இன்மை காரணமாக தாபிக்கப்பட்ட உபகரணங்கள் கழன்று போயிருந்தன. |